StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - I ( 2012-2013 )**

Time : 3 hours | **Tamil** | Mark[s]

நேரம் - 3 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள் - 9[0]

**Class : VII** | பகுதி - 1 | **ஏழாம் வகுப்பு**

**அ ) கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கடல்வாழ் உயிரினங்களில் கணவாய் என்பது ஒருவகை. கணவாய்களுக்குக் கால்கள் தலையிலிருந்தே முளைத்திருக்கும். அதனால் இவற்றைத் தலைக்காலிகள் எனவும் அழைப்பர். கணவாயில் பலவகை உண்டு. ஓட்டுக்கணவாய், கூந்தற்கணவாய், பேய்க்கணவாய் என்பன அவை.கடற்கரையோரங்களிலும், கடலின் ஆழமான பகுதிகளிலும் அவை வாழ்கின்றன. கடற்பாறைகளிலும், ஊனத்திட்டுகளின் இடையிலும் இவை காணப்படுகின்றன. கணவாயின் உடல் நுங்கைப் போல் மிருதுவாக இருக்கும். கணவாய்களுக்கு எட்டு அல்லது பத்துக் கால்கள் இருக்கும். கால்களின் நடுவில் இதன் வாய் அமைந்துள்ளது. கணவாய்கள் வேண்டும்போது தம் நிறத்தை மாற்றிக்கொள்ளும். இவை தம் உடம்பிலிருந்து செப்பியா் என்னும் மையைக் கக்குவதால் தன்னைத் தின்ன வரும் விலங்குகள் மீது பட்டு அவை மோப்ப உணா்ச்சியற்றுப் போகும். இவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.

<u>வினாக்கள்</u> **10**

1. கணவாய்கள் தலைக்காலிகள் என ஏன் அழைக்கப்படுகின்றன ?
2. கணவாய்கள் எங்கு வாழ்கின்றன ? எங்குக் காணப்படுகின்றன ?
3. கணவாய்கள் தம்மைத் தின்ன வரும் விலங்குகளிடமிருந்து தப்புவது எப்படி ?
4. கணவாய்க்கு எத்தனை கால்கள் உண்டு ? அதன் வாய் எப்படி அமைந்துள்ளது ?
5. கணவாயின் வகைகளைக் கூறு.

**ஆ ) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப் பற்றிக் கட்டுரை எழுதுக.** **10**

1. நான் விரும்பும் கவிஞா்.
2. கடல்

**இ ) கடிதம் எழுதுக,** **10**

1. விடுதியில் தங்கியிருக்கும் நீ, கல்விச் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி - 2

**அ ) பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

1. சுட்டுத்திரிபு
   அ) அவ்வீடு ஆ) இவ்வீடு இ) அந்த வீடு ஈ) கூரை வீடு
2. அகவினா
   அ) எவன்? ஆ) எந்த மனிதன் ? இ) மனிதனா? ஈ) எக்குதிரை?



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

3 . தொகைச்சொல்

அ) முந்நீர் ஆ) கலகல இ) ஓடு ஓடு ஈ) வெற்றியும் தோல்வி...

**ஆ ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

4 . சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் ________________.

அ) ஆ, ஏ, ஓ ஆ) எ, ஏ, யா இ) ஆ, ஏ, யா ஈ) ஆ, ஓ, யா

5 . தொலைவில் உள்ளவற்றைச் சுட்டிக்காட்டுவது ________________.

அ) அண்மைச்சுட்டு ஆ) சேய்மைச்சுட்டு இ) சுட்டுத்திரிபு ஈ) அகச்சுட்டு

6 . உண்ணல், தின்னல், பருகல், நக்கல் என்பன ________________.

அ) நாற்படை ஆ) நானிலம் இ) நாற்குணம் ஈ) நால்வகை உணவு

**இ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

7 . தலைவலி ( மாத்திரை கூறு )

அ) ஐந்து மாத்திரை ஆ) ஒரு மாத்திரை இ) ஆறு மாத்திரை ஈ) இரண்டு மாத்திரை

8 . மயில் ( அண்மைச்சுட்டு ஆக்குக )

அ) அம்மயில் ஆ) அந்த மயில் இ) எந்த மயில் ஈ) இம்மயில்

9 . நன்றன்றோ ? ( வினா எழுத்தினை எடுத்து எழுதுக )

அ) றோ ஆ) ஓ இ) றா ஈ) ஆ

**ஈ ) பொருத்தமான இலக்கணக்குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

10 . எவ்வீடு ?

அ) அகச்சுட்டு ஆ) அகவினா இ) புறவினா ஈ) புறச்சுட்டு

11 . ஆறு மாத்திரை

அ) செங்கோட்டை ஆ) பௌர்ணமி இ) கொற்கை ஈ) முக்கனி

12 . மெய், வாய், கண், மூக்கு, செவி

அ) ஐம்பூதம் ஆ) ஐம்பொறி இ) ஐவகை நிலங்கள் ஈ) ஐம்பெரும் காப்பியம்

**உ ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

13 . அ) கண் இமைக்கும் நேரம் ஒரு மாத்திரை ஆகும்.
ஆ) கண் இமைக்கும் நேரம் இரண்டு மாத்திரை ஆகும்.
இ) கண் இமைக்கும் நேரம் மூன்று மாத்திரை ஆகும்.
ஈ) கண் இமைக்கும் நேரம் அரை மாத்திரை ஆகும்.

14 . அ) ஏ - என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருளை உணர்த்தும்.
ஆ) ஓ - என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருளை உணர்த்தும்.
இ) ஆ - என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருளை உணர்த்தும்.
ஈ) யா - என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருளை உணர்த்தும்.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

15 . அ) அக்குடிசை என்பது புறச்சுட்டு ஆகும்.
ஆ) அக்குடிசை என்பது அகச்சுட்டு ஆகும்.
இ) அக்குடிசை என்பது அண்மைச்சுட்டு ஆகும்.
ஈ) அக்குடிசை என்பது சுட்டுத்திரிபு ஆகும்.

## பகுதி - 3

**அ ) பொருள் தருக.** **2**

1 . அகழி 2 . நீர் வேட்கை

**ஆ ) பிரித்து எழுதுக.** **2**

1 . காட்டெருமைகள் 2 . நெற்களஞ்சியம்

**இ ) பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.** **2**

1 . யாழினி ___________ உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தாள். ( விலை / விளை )

2 . ஓவியர் வண்ணங்களை _____________.( குழைத்தார் / குலைத்தார் )

**ஈ ) தொடர் அமைத்து எழுதுக.** **2**

1 . புதுமை 2 . விண்ணில்

**உ ) பொருள் வேறுபாடு தருக.** **2**

1 . ஒலி / ஒளி 2 . தழை / தளை

**ஊ ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

1 . விசும்பு என்பதைக் குறிக்கும் சொல்
அ) நிலம் ஆ) காற்று இ) வான்

2 . சத்தியம் என்பதைக் குறிக்கும் சொல்
அ) உண்மை ஆ) பொய்மை இ) இன்மை

3 . ஓவியத்தைக் குறிக்கும் வேறு சொல்
அ) வண்ணம் ஆ) சிற்பம் இ ) சித்திரம்

## பகுதி - 4

**அ ) கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

மனிதர்கள் மீது அமில மழை விழுந்தால் உடம்பெல்லாம் புண்ணாகுமே! பிறக்கப்போகும் குழந்தைகள்கூட ஊனமாக பிறக்குமே! நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது. மீண்டும் விண்ணில் பறந்தேன். கீழே பார்த்தேன், ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அது சாக்கடையாகக் காட்சியளித்தது.தொழிற்சாலைகளின் வேதிக்கழிவுகள், சாயப்பட்டறைகளின் கழிவுகள் போன்றவை ஆற்றில் கலந்து கொண்டிருந்தன. இந்த நீரை மனிதர்கள் குடித்தால் சிறுநீரகக் கோளாறுகள், மஞ்சள் காமாலை, காய்ச்சல், வாந்தி, பேதி முதலிய பல நோய்கள் ஏற்படுமே! நிலமும் பாழ்! நீரும் பாழ்! காற்றும் பாழ்!

<u>வினாக்கள்</u> **4**

**1 . வேதிக்கழிவுகள் கலந்த ஆற்று நீரைக் குடிப்பதால் ஏற்படும் நோய் _______________ .**
அ) மஞ்சள் காமாலை ஆ) இரத்தக் கொதிப்பு இ) மாரடைப்பு

**2 . சாயப்பட்டறை என்பதன் பொருள் _______________ .**
அ) கழிவுப்பொருள் ஆ) நச்சுப்பொருள் இ) வண்ணமேற்றும் தொழிற்சாலை



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

3 . மங்கை கனவில் கண்ட ஆறு _____________ காட்சியளித்தது.

அ) சாக்கடையாக ஆ) சுத்தமாக இ) நீரின்றி

4 . அமிலமழை பெய்தால் _____________ .

அ) தொழிற்சாலைகள் பெருகும். ஆ) ஆற்றில் நீா் நிறைந்து வழியும்

இ) மனிதா்களின் உடல் புண்ணாகும், குழந்தைகள் கூட ஊனமாகப் பிறக்கும்.

**ஆ ) பொருத்தமான விடையைத் தோ்ந்தெடுத்து நிரப்புக.** **4**

1 . **துன்பத்தால் வருந்திக் கெடாதவா் யாா் ?**

அ ) தன்னை நாடி வரும் விருந்தினரை உபசரித்துப் பாதுகாப்பவா்.

ஆ ) தன்னை நாடி வரும் விருந்தினரை உபசரிக்காதவா்.

இ ) தன்னை நாடி விருந்தினா் வருவதை விரும்பாதவா்.

2 . **நுட்பமாகக் கேட்டறியும் திறமை பெற்றவா்**

அ ) வஞ்சகமான நெஞ்சமுடையவராய் இருப்பா்.

ஆ ) புத்திக்கூா்மை இல்லாதவராய் இருப்பா்.

இ ) பணிவு மிக்க சொற்களைப் பேசுபவராக இருப்பா்.

3 . **களஞ்சியம் என்பதன் பொருள் என்ன ?**

அ ) தண்ணீா் சோ்த்து வைக்கும் இடம்.

ஆ) தானியம் சோ்த்து வைக்குமிடம்.

இ ) பசுக்கள் தங்கும் இடம்.

4 . **தஞ்சை கோயிலில் உள்ள நந்திச்சிலையின் சிறப்பு யாது ?**

அ ) மிகப்பெரிய மண் சிலை

ஆ) ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய சிலை.

இ ) பொன்னால் ஆகிய பெரிய சிலை.

**இ ) அடி பிறழாமல் எழுதுக.** **4**

1 . **துப்பார்க்கு** எனத் தொடங்கும் திருக்குறள்.

2 . **விருந்து** என முடியும் திருக்குறள்.

**ஈ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **12**

1 . கவிமணி இறைவனிடம் வேண்டுவன யாவை ?

2 . இராசராசன் வாயிலின் சிறப்பு யாது ?

3 . மங்கை கண்ட இயற்கை வளம் பற்றிக் கூறுக.

4 . தஞ்சை கோயிலில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள உருவங்கள் எவை ?

5 . மங்கை மனம் வருந்தக் காரணம் என்ன ?

**உ) பின்வரும் தலைப்பில் சுருக்கமாக கருத்தும், பொருளும் மாறாமல் துணைப்பாடக்கட்டுரை எழுதுக.**

1 . வெற்றியின் முதற்படி **8**



www.StudentBounty.com
Homework Help & Pastpapers